FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364171

1. District : திருச்சி மாவட்டம் PS: உளவுப்பிரிவு மாநகர் காவல்நிலையம் Year: 2026 FIR No.: 04 Date: 27/2/2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27/2/2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 11.00hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 27/2/2026 Time : 19.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் இணையவழி புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 km வடக்கு
Beat Number : (b) Address : உதவி மின் பொறியாளர் அலுவலகம்,
முறைக் காவல் எண் முகவரி ஸ்ரீரங்கம்பட்டு, ஸ்ரீரங்கம் Tk, திருச்சி DT.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : C. பிச்சைமுத்து (b) Father's/ Husband's Name : சின்னகாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 15/6/1979 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம் (g) Address : 2/36, செம்புலிச்சாம்பட்டு
தொழில் முகவரி சோம்பரை, ஸ்ரீரங்கம் Tk, திருச்சி DT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தி.டு. ராஜா, உதவி மின் பொறியாளர், திருப்பராய்துறை மின்வாரியம், ஸ்ரீரங்கம்பட்டு, ஸ்ரீரங்கம் Tk, திருச்சி DT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/02/2026

27.02.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(G. SAKTHIVEL)
Inspector of Police

15. Date & Time of despatch to the court: 27.02.2026 22 CP 2125.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....
Trichy

மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2026–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 27.02.2026 பணியில் இருந்த போது, இரவு 19.00 மணியளவில் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, கோம்பை, செம்புலிச்சாம்பட்டி, கதவு எண்.2/36 என்ற முகவரியில் வசித்து வரும் சின்னசாமியின் மகன் திரு.பிச்சைமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், செங்காட்டுப்பட்டி உதவி மின்பொறியாளர் திரு.ராஜு மற்றும் புகார்தாரர் திரு.பிச்சைமுத்து ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 27.02.2026 இரவு 21.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.4/2026 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் C.பிச்சைமுத்து, வயது 46/2026, த/பெ.சின்னசாமி, நெ.2/36, செம்புலிச்சாம்பட்டி, கோம்பை, துறையூர் தாலுகா, திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், திருச்சி. ஐயா, நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, கோம்பை பஞ்சாயத்து, செம்புலிச்சாம்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பன்னிரென்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். செம்புலிச்சாம்பட்டியில் எனது தந்தைக்கு சொந்தமாக பாசன கிணற்றுடன் கூடிய சுமார் 6 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. நானும், எனது தந்தையும் மேற்படி நிலத்தில் விவசாயம் செய்து வருகிறோம். மேற்படி விவசாய நிலத்திற்கு கிணற்றிலிருந்து நீர் எடுத்து விவசாயம் செய்ய இலவச மின்சாரம் வேண்டி என் தந்தை தாட்கோ உதவியுடன் இலவச மின் இணைப்பு பெற, கடந்த 2017 ஆம் வருடம் விண்ணப்பித்திருந்தார். அதற்கு தாட்கோ இயக்குநர் அலுவலகம் சென்னையிலிருந்து பழங்குடியினர் நல விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு வழங்க மின்சார வாரியத்திற்கு கடந்த 19.07.2025 நிதி விடுவிக்க உத்தாவிடப்பட்டது. அதன் தகவல் எங்களுக்கு கிடைக்கப்பெற்றது. ஆனாலும் விவசாய மின் இணைப்பு மின்சார வாரியத்தால் வழங்கப்படாமல் இருந்து வந்தது. இதற்கிடையில், மேற்படி மின் இணைப்பு வழங்க, ஏற்பாடு செய்வதற்கான உத்தரவு உதவி மின்பொறியாளர் செங்காட்டுப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்கு வரப்பெற்ற விபரம் அறிந்த எனது தந்தை பலமுறை மேற்படி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தார். ஆனாலும், எங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படாமல் இருந்து வந்தது. எனது தந்தை தன்னால்

அலைய முடியவில்லை என்று கூறி என்னை, செங்காட்டுப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று, அதிகாரியை சந்தித்து, விபரம் கேட்டு வருமாறு கூறினார். அதன்படி நான் இன்று 27.02.2026ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திருச்சி, செங்காட்டுப்பட்டியிலுள்ள உள்ள உதவி மின்பொறியாளர், மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று அங்கு இருந்த உதவி மின்பொறியாளர் திரு.ராஜு என்பவரை சந்தித்து, எங்களுடைய விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு பெறுவது தொடர்பாக விபரம் கேட்டேன். அதற்கு உதவி மின்பொறியாளர் திரு.ராஜு அவர்கள் உங்களுடைய நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வழங்க தாட்கோவிலிருந்து உத்தரவு வந்திருச்சு, என்ன நீங்க கவனிச்சீங்கனா சீக்கிரம் விவசாய மின் இணைப்பு கிடைக்கும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் என்ன சார் கவனிக்கனும் என்று கேட்டேன். அதற்கு அவர் ஒன்னும் தெரியாத மாதிரி கேட்பீங்க, சரி எனக்கு தனியா 3,000 ரூபாய் கொடுத்திடுங்க விவசாய மின் இணைப்பு கொடுத்திடலாம் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சார், ஏற்கனவே கவர்மெண்ட் பீஸ் பேங்கில் கட்டிவிட்டோமே, இன்னும், என்ன சார் இதுவும் கவர்மெண்ட் பீசா என்று கேட்டேன். அதற்கு உதவி மின்பொறியாளர் திரு.ராஜு அவர்கள் அதெல்லம் இல்ல, எனக்கு பணம் கொடுத்தீங்கனா உங்களுக்கு விவசாய மின் இணைப்பு சீக்கிரம் கிடைக்கும், இல்லாட்டி நீங்க இப்படியே அலைஞ்சுகிட்டு இருக்க வேண்டியதான் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரிங்க சார், பணத்தை ரெடி பண்ணிகிட்டு வந்திடுறேன் என்று சொன்னேன், அப்போது உதவி மின்பொறியாளர் திரு.ராஜு அவர்கள் நாளைக்கு துறையூருக்கு வந்து எனக்கு போன் பண்ணுங்கள், நான் எங்கியிருக்கிறேன் என்று சொல்றேன், பின்னர் என்னை வந்து பாருங்கள் என்று சொன்னார், நான் சரிங்க சார், சார் சொல்கிறபடி நாளைக்கு போன் பன்னிட்டு வந்திடுறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எங்களுடைய நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்ட செங்காட்டுப்பட்டி உதவி மின்பொறியாளர் திரு.ராஜு என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (C.Pichaimuthu) 27/02/2026 Submitted to the Court of Hon'ble Principal District and Sessions Judge Tiruchirappalli. Received this report at 1900 Hrs. on 27.2.2026 and obtained permission from DVAC and made Confidential Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.4/2026 U/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 21.30 Hrs. on 27.02.2026. Sd.xxx (G.SAKTHIVEL) 27.02.2026 Inspector of Police V&AC Trichy.

27.02.2026
(G. SAKTHIVEL)
Inspector of Police
V&AC
Trichy.